[5th March 1959

(*b*) if so, the action taken or proposed to be taken to keep such roads in proper repair?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Minister for Local Administration) : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—CALLING ATTENTION TO THE PREVALENCE OF TYPHOID; CHICKEN-POX AND SMALLPOX IN EPIDEMIC FORM IN MADRAS CITY.

SRI T. P. SRINIVASAVARADAN : Mr. Chairman, Sir, under rule 41 (1) of the Madras Council Rules, I seek your permission to call the attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance, namely, the wide prevalence of typhoid, chicken-pox and smallpox in epidemic form in certain parts of Madras City, especially in Triplicane. Since the beginning of the month, a number of young boys and girls, especially the school-going children have been affected. It is suspected that the tap water is highly contaminated and that this is the main cause of the prevalence of the disease. Eatables exposed to flies have also contributed to the spread of the disease. It is requested that the Government should lose no time in taking steps to arrest the spread of the disease.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, about 112 cases of typhoid have been reported from the hospitals of the City so far, out of which 60 cases were from the Triplicane area. As a preventive measure, about 3,000 inoculations have been done. The response from the public has been poor as inoculation is not now compulsory. The Health Officer has been instructed to take action to enforce compulsory preventive inoculation by getting the City declared as infected with 'enteric fever'. The Corporation conservancy staff has been alerted to keep the affected areas clean. Deflying is being done, water mains are being sterilized and all other preventive measures taken by the Corporation Health staff.

There has been a slight increase in the incidence of chicken-pox in the City which is usual during this season. From the 1st January to the 25th February 1959, 521, attacks due to chicken-pox have been reported. No deaths have been reported. There is no prophylactic for this disease. The cases are isolated wherever necessary to check the further spread of the disease.

Sporadic infection of smallpox is prevailing in the City. From 1st January up to 25th February 1959, 359 attacks and 76 deaths have been reported. During this period 9,319 primary vaccinations and 54,946 revaccinations were done by the Corporation Health staff. There is at present no indication of a serious epidemic.

5th March 1959] [Sri M. A. Manickavelu]

The Corporation has assured that all necessary preventive and control measures are being taken to combat the spread of the disease. The situation is under close watch. There is no cause for any anxiety.

III.—GOVERNMENT BUSINESS.

GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959–60.

* **Sri V. V. RAMASWAMI** : கனம் மன்றத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கை இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் சபையில் முதல் முதலாக விவாதத்தைத் துவக்கி வைப்பதற்கு எதிர்க் கட்சியினருக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்துக் கொண்டு, அதோடு நில்லாமல் விவாதத்தை ஆரம்பித்து வைப்பதற்கு எனக்கு அனுமதி கொடுத்ததற்காக என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் நல்ல தமிழில் வாசித்ததைக் கேட்ட எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. மேலும், எடுத்த எடுப்பிலே புதிய வரிகள் கிடையாது என்று தெரிவித்தது ஆறுதல் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அதோடு நில்லாது ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் உபரி கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். நம் மாநிலத்திற்குத் தேவையான நிதியை நாமே தேடிக்கொள்ளவேண்டும். அதற்குரிய ஆற்றல் நமக்கு உண்டு என்பதை நிரூபிக்கும் முறையில், டில்லி அரசினரிடமிருந்து மேலிட்டு மான்யம் கேட்காமல் வரவு செலவுத் திட்டத்தைப் புதிய வரிகள் போட்டுச் சரிக்கட்டி வந்தார்கள். “மத்திய சர்க்காரிடம் நாம் கடன் வாங்கியிருக்கும் தொகைகளின் பேரில் செலுத்தப்படவேண்டிய வட்டி விகிதத்தைப்பற்றிய நிதிக் கமிஷன் சிபாரிசுகளை மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ளாமல் இருந்தார்கள். அந்தச் சிபாரிசுகள் சில மாறுதல்களுடன் மத்திய சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. அதனடி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் நமக்கு மீதமாகும்” என்று அமைச்சர் எடுத்துக் காட்டுகிறார். சென்ற ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட டீசல் வரியை உயர்த்திப் போட்டுச் சரிக்கட்டியதோடு உபரியாக ரூ. 15 லட்சம் எதிர்பார்க்கப்பட்டது. அப்பொழுது பேசும்பொழுது யானும் குறிப்பிட்டேன். மத்திய அரசுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளுக்குச் செலுத்தவேண்டிய வட்டி விகிதத்தைக் குறைத்தால், ரூ. 60 லட்சம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் அமைச்சர் விவசாயிகளைப் பாதிக்கும் டீசல் ஆயில் வரியை உயர்த்தாமல் துண்டு விழும்படி செய்தால், மத்திய அரசாங்கத்திடம் மேலிட்டு சலுகைக்கு வாதாடி அடைய முடியாதா என்று கேட்டேன். இப்பொழுது என்ன பார்க்கிறோம் ? புதிய வரி போட்டு ரூ. 15 லட்சம் மட்டும் உபரித் தொகை எதிர்பார்த்ததற்குப் பதிலாக ரூ. 265 லட்சம் உபரியோடு கணக்கு முடியுமென்று தெரிகிறது. இந்த உபரி அரசாங்கச் செலவினங்களில் செய்த சிக்கனத்தாலுமல்ல, மத்திய அரசாங்கம் கொடுத்துதவியதுமல்ல, வருவாய்த் துறையில் அதிக வருமானம் வந்ததால் அல்ல, ஆனால் விலைவாசிகளின் உயர்வால் விற்பனை வரி மூலமாகக் கிடைத்தது. வரும் ஆண்டில் ஒரு கோடியே 39 லட்சம் ரூபாய் உபரி எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் ? விற்பனை வரி இனத்தில் கூடுதலாகக் கிடைத்ததை வைத்துக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 14 கோடி வரும் என்று அமைச்சர் திரு. வெங்கடராமன் அவர்கள் குதூகலத்துடன் கூறிக்கொண்டிருந்தார்கள். அவ்வளவு எதிர் பார்க்கும்போது உணவுப்பொருள்களை வரிவிதிப்பிலிருந்து விலக்கக் கூடாதா , ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த 7 அமுகல் பண்டங்களுக்காவது 3–20 p.m.
விலக்கு அளிக்கக் கூடாதா என்று எவ்வளவோ மன்றாடிக் கேட்டேன். அப்போது கனம் அமைச்சர் “மொத்த வருவாய் குறைந்துவிடக்கூடாது. சோதனை செய்து பார்க்க விரும்பவில்லை. **I am not prepared to experiment**” என்று சொல்லிவிட்டார். வரும் ஆண்டில் கோடி